Name of the Newspaper ....DINAMALAR.................... Date: 17.1

# மெட்ரோ நிலையங்களில் கோல போட்டிகள்



பொங்கல் பண்டிகையையொட்டி, மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில், ஆலந்துார் ஆசர்கானா மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த கோலப்போட்டி.

சென்னை, ஜன. 17–

ஆலந்துார் மற்றும் வடபழனி ஆகிய, மெட்ரோ ரயில் நிலையங்களில், பொங்கலையொட்டி, பயணியரை கவரும் வகையில், போட்டிகள் நடத்தப்பட்டன.

சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில், பொதுமக்கள் பங்கேற்கும் வகையில், பொங்கல் பண்டிகை சிறப்பு போட்டிகள், நேற்று நடத்தப்பட்டன.

ஆலந்துார் மெட்ரோ ரயில் நிலைய வளாகத்தில், கோலப்போட்டி நடத்தப்பட்டது. இதில், ஒரு திருநங்கை மற்றும், 25 பெண்கள் பங்கேற்றனர். மலர்கள், பொங்கல் பானை மற்றும் ஜல்லிக்கட்டு போட்டியை நினைவு கூரும் வகையில் கோலங்கள் போடப்பட்டன.

முதல் மூன்று பேருக்கு, நினைவு பரிசு மற்றும் போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டன.

அதேபோல், வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில், ஓவியப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டி நடைபெற்றது. இதில், வெற்றி பெற்றோருக்கு நினைவு பரிசு மற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.